திருமதி ப. சரஸ்வதி : மிக விரைவில் அந்தக் குளிரூட்டும் நிலையத்தை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3-வது பால்பெருக்குத் திட்டத்தில் தேசிய பால்வள வாரியத்தின் நிதி ஒதுக்கப்பட்டு, 95.59 லட்சம் அளவிலே அந்தக் கட்டிடம் இப்பொழுது கட்டி முடிக்கப்பட இருக்கிறது. இத்திட்டம் 1994 ஜனவரியில் முடியும். முடிந்த உடனே அதை மாற்றி அங்கு கொண்டு போவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 397, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

397—

தொழிலாளர் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் பட்டப்படிப்புகள்.

* 10161—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப் பட்டு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தால் 1987-ஆம் ஆண்டு முதல் நடத்தப்படும் Bachelor of Labour Management, Master of Labour Management ஆகிய பட்டப்படிப்புகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு தொழிற் கல்வியாக அங்கீகரிக்கவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்தப் பட்டப் படிப்புகளை தொழிற் கல்வியாக அங்கீகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தொழிலாளர் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் பி.எல்.எம். மற்றும் எம்.எல்.எம். பட்டப் படிப்புகளை அங்கீகரிக்க தேர்வாணையம் இசைவளித்துள்ளது அது தொடர்பாக விதிகளைத் திருத்தம் செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் பி.எல்.எம். மற்றும் எம்.எல்.எம். பட்டப் படிப்பு களை படித்து முடித்த, 1992 வரை சுமார் 150 மாணவர்கள் தற்போது அரசுத் துறைகளிலோ அல்லது பொது நிறுவனங் களிலோ இது நாள்வரை வேலை வாய்ப்பு இல்லாமல் இருக் கிறார்கள். உதவி தொழிலாளர் ஆய்வாளர், அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ஆப் லேபர், மற்றும் லேபர் ஆபீசர் போன்ற பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுமம் வேலை வாய்ப்புக்காக விளம்பரம் செய்கின்ற சமயத் தில்கூட இக்கல்வியை நிர்ணயித்தால்—நடத்தப்படுகின்ற பி.எல்.எம். மற்றும் எம்.எல்.எம். இவைகளை—மேற்கூறிய பணிவாய்ப்பை பெற முக்கிய கல்வித் தகுதியாக இதுநாள் வரை தேர்வாணைக் குழு அங்கீகரிக்கவில்லை என்பதால் குறிப் பிட்ட காலத்திற்குள் விரைவில் இப்பட்டப் படிப்புகளை அங்கீகரிக்க தேர்வாணைக் குழுவுக்கு மாண்புமிகு அமைச்சர் வலியுறுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு ஒப்புதல் அளிக்க தேர்வாணையம் இசைவு அளித்துள்ளது. அதன்பேரில் தமிழ்நாடு தொழிலாளர் சார்பு பணி சிறப்பு விதிகள் மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் பணி விதிகள் ஆகியவற்றை திருத்தம் செய்ய தொழிலாளர் நல ஆணையாளர் செயற் குறிப்புகள் அனுப்பியுள்ளார். அது குறித்து தற்போது தேர் வாணையத்தினுடைய அறிவுரையைப் பெற்று அதன் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

வினா எண் 398, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.